# தாம்பரம் கோட்டம்

சிங்கபெருமாள் கோயில், மதுராந்தகம் ஏரி, பீர்க்கன்காரணை ஏரி மற்றும் தாம்பரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளிலிருந்து வடிந்த வருவதை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் மற்றும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப கண்காணிப்பு அலுவலர் திரு.ஆனந்த் இ.ஆ.ப ஆகியோர் உடனிருந்தனர்.

சிங்க பெருமாள் கோயில் விஞ்சியம்பாக்கம் ஏரியிலிருந்து வடிகால் மூலம் செல்லும் உபரிநீர் விரைவாக வடியாததால் தேசிய நெடுஞ்சாலையில் வழிந்தோடும் நிலை ஏற்பட்டது. இதனை பார்வையிட்ட அமைச்சர்கள் வடிகாலை முறையாக தூர்வாறுவது மட்டுமின்றி ஆக்கிரமிப்புகளை அகற்ற அலுவலர்களுக்கு உத்தரவிட்டனர். மேலும் சிங்கபெருமாள் கோயில் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள கழிவுநீர் வடிகாலை ஜெ.சி.பி. இயந்திரம் மூலம் அடைப்புகளை நீக்கி மழைநீர் வரைந்து வடிவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைளை பார்வையிட்டனர். பின்னர் திருத்தேரி தாங்கலுக்கு செல்லும் வடிகாலில் ஏற்பட்டுள்ள அடைப்பை நீக்கும் பணியையும் அமைச்சர்கள் பார்வையிட்டனர்.

பின்னர் மதுராந்தகம் ஏரிக்கு சென்ற அமைச்சர்கள் ஏரி முழு கொள்ளளவை எட்டும் நிலையில் உள்ளதை பார்வையிட்டு ஏரியில் தேங்கியுள்ள நீரின் அளவு குறித்து கேட்டறிந்து ஏரிக்கு வரும் நீரின் அளவை தொடர்ந்து கண்காணித்து அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்குமாறு பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டனர். பின்னர் பீர்க்கன்கரணை ஏரியிலும் மாண்புமிகு அமைச்சர்கள் ஆய்வு மேற்கொண்டனர். பீர்க்கன்காரணை ஏரியிலிருந்து செல்லும் தாம்பரம் முடிச்சூர் உபரிநீர் வடிகால், இரும்புலியூர் ஏரி உபரிநீர் செல்லும் வடிகால் சேலையூர் ஏரி உபரிநீர் செல்லும் வடிகால், வேளச்சேரி சாலை ஈஸ்வரி நகர் உள்ளிட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டனர். இப்பகுதிகளை மழைநீர் விரைந்து வடிவதற்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் மேற்கொள்ளப்படும் திட்டத்தில் இணைக்கவும், தற்காலிகமாக மோட்டார் இன்ஜீன்கள் மூலம் தேங்கியுள்ள மழைநீரை இறைந்து விரைந்து வடிவதற்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டனர்.

இந்நிகழ்ச்சியில், பாராளுமன்ற உறுப்பினர், திருமதி.மரகதம் குமரவேல், திரு.கே.என்.ராமச்சந்திரன், செங்கல்பட்டு சார் ஆட்சியர், திரு.ஜெயசீலன் இ.ஆ.ப, காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு.ஆறுமுகம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

Photo caption

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் மற்றும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோர் மதுராந்தகம் ஏரியை பார்வையிட்டனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா,இ.ஆ.ப, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி மரகதம் குமரவேல் ஆகியோர் உள்ளனர்.